மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, சில வேளைகளில் தனிப்பட்டவர்கள்கூட விடுதிகள் நடத்துகிறார்கள். அதிலே நல்ல முன்னேற்றமோ அல்லது மாணவர்களுக்குத் தேவையான வசதிகளோ தரப்படவில்லை என்கிற காரணங்களால் அப்படிப் பட்டவைகளை ஆண்டுக்காண்டு அரசாங்கம் கைப்பற்றிக் கொண்டு இருக்கிறது. அரசாங்கமே பொறுப்பேற்று நடத்தும் விடுதிகளில் மாவட்ட நல அதிகாரிகளும், கலெக்டர்களும் மேற்பார்வை பார்க்கிறார்கள். ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால், அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் பரிசீலனை செய்யலாம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: தலைவர் அவர்களே, அரிசன மாணவர் விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் புள்ளி கூடுதலாக இருப்பதால், ஊட்டச் சத்துக் குறைவான உணவுகளே பரிமாறப்படுகின்றன. ஆகவே, வாழ்க்கைச் செலவுப் புள்ளி கூடும் அடிப்படையில் கொடுக்கப்படும் தொகையைக் கூடுதலாக்கிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதை உத்தேசித்துத்தான், பள்ளி மாணவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு 18 ரூபாய் என்று இருந்ததை 19 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. இந்த முறையை பட்ஜட் அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்து, இதற்காக ரூபாய் 3 லட்சம் ஒதுக்கியிருப்பதையும் தெரிவித்தார்கள். நீண்டகாலமாக அத்தகைய அவசியம் இருந்தும் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகுதான் ஒதுக்கியிருக்கிறது. அதன்மூலம் பூர்த்தியாகிவிட்டது என்று சொல்லிவிட முடியாது. ஆனால், 20 ஆண்டு காலமாக உயர்த்தாமல் இருந்த நிலையை மாற்றிக் குறைந்த அளவில் ஒரு ரூபாய் உயர்த்தியிருக்கிறோம். மேலும் உயர்த்த வேண்டும் என்கிற எண்ணமும் இருக்கிறது.

மில் தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி

* 344 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மில் தொழிலாளர்களின் பஞ்சப்படியைக் குறைப்பதாக சர்க்காருக்குத் தகவல் உண்டா?

(இ) ஆம் என்றால், சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

1968 மார்ச் 27]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், என் கேள்வி வரும் போதெல்லாம் ஒரே ஒரு உதவிக் கேள்விக்குத்தான் அனுமதிக்கிறீர்கள். தயவு செய்து இந்த மாதிரிக் கேள்வி நேரத்திலே, மூலக் கேள்வி போட்டவர்களுக்கு அதிகமாக உதவிக் கேள்விகள் போட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கோதண்டராமனுக்குத்தான் அதிகமாக வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. மார்டின் : அவர்கள் கேள்விகள்தான் அதிகமாக வந்திருக்கின்றன. நாங்கள் கொடுத்ததெல்லாம் இன்னும் வரவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், நடைமுறையிலே தொழிலாளிகள் பழி வாங்கப்படுவது, இந்தப் பஞ்சப்படியைக் குறைப்பதாலேயே. அது சம்பந்தமாக அமைச்சரிடமும், அதிகாரிகளிடமும், கன்சிலியேஷன் நடைபெறக்கூடிய காலங்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பஞ்சப்படியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்களே, அது சம்பந்தமாக இன்றைக்கு அமைச்சரவர்களுடைய கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அமைச்சருக்குத் தனிப்பட்ட கருத்து எதுவும் கிடையாது. பஞ்சப்படியைக் குறைக்க வேண்டும் என்று பொதுவாக இங்கே சொல்லப்படவில்லை. குறிப்பாக, மந்தம் ஏற்பட்டிருப்பதால், அங்கே உள்ள தொழிலாளிகள், முதலாளிகள், ஒவ்வொருவரும் விட்டுக் கொடுத்து தொடர்ந்து நடத்த வேண்டியதுபற்றி ஆலோசனைகள் கூறப்படுகின்றன. அதிலே இதுவும் ஒன்று.

திரு. எம். சுரேந்திரன் : பஞ்சப்படிப் புள்ளி விவரங்கள் தயாரிப்பதிலேயே தகராறு இருக்கிறது என்று புகார் செய்யப் பட்டிருப்பதாக அறிகிறேன். இன்றைய வாழ்க்கைப் புள்ளி உயர்ந்து கொண்டே போகும் நிலையில், சராசரி பஞ்சப்படியை உயர்த்த வேண்டும் என்பதை அரசாங்கம் புரிந்து கொண்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வாழ்க்கைப் புள்ளி உயர, அதன் விளைவாக விலைவாசி ஏற்றம், அதன் விளைவாக தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படி உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வருகிறது. அது நியாயமான கோரிக்கை இல்லை என்று சொல்ல முடியாது. அதே சமயத்தில், விலைவாசிகள் ஏறிக் கொண்டே இருக்க, வாழ்க்கைப் புள்ளி உயர்ந்து கொண்டே போக, ஒவ்வொரு தொழிற்சாலையையும் நடத்துகிறவர்களுக்கு, கொடுக்க, ' கபாஸிடிடு பே' இருக்க வேண்டும் என்றும் வாதாடப்படுகிறது. அப்படி இரண்டு வாதங்களும் இருக்கின்றன.

திரு. கே. என். குமாரசாமி : பஞ்சப்படியைக் குறைக்க வேண்டும் என்பதைப்பற்றி ஆலை முதலாளிகள், ஏற்கனவே தொழில் சங்கங்களைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் கேட்கும் முறை தவறானது என்று அரசாங்கத்திடம் தொழிற்சங்கத் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன்பேரில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பிரச்சினை 1966-லிருந்து, தென்னிந்திய மில் சொந்தக்காரர்கள் சார்பில் சொல்லப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் சார்பில், விலைவாசிகள் இருக்கும் நிலையில், பஞ்சப்படி குறைக்கப்பட்டால் வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மில் ஓனர்கள் சார்பில் தொழிலில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது, பொருள்கள் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று வாதம் செய்யப்படுகிறது. அதைப்பற்றி இரண்டு தரப்பினரும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி முடிவு காண வேண்டும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, பொதுவாக கடந்த 10 ஆண்டுக் காலமாகவே, விலைவாசிப் புள்ளி உயர்ந்து கொண்டே போய், சராசரி லாப விகிதமும் ஒரே மாதிரி இருக்க வில்லை. ஆகவே, பஞ்சப்படி அதிகமாக அளிக்க வேண்டும் என்ற வாதத்தையும் சமீபத்திலே மத்திய அமைச்சர் திரு. மொரார்ஜி நிராகரித்திருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? பேச்சு நடத்த அடிப்படை வேற்றுமை அதுதான் என்று ஏற்றுக்கொள் ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வியிலேயே பதில் இருக் கிறது. வாழ்க்கைப் புள்ளி உயர்வால் சராசரி லாபம் அப்படியே இருக்கவில்லை. அதுதான் அதற்குப் பதில்.

Erskine Hospital at Madurai

* 345 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR. Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the criticism in the Municipal Council, Madurai, about the administration of the Erskine Hospital; and

(*b*) the action taken thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) கேள்வியின் இந்த உட் பிரிவில் கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அது அரசின் பார்வைக்கு வரும்பொழுது ஓர் ஊராட்சி மன்றம் அவ்வாறு குற்றம் சாட்டுவது ஒழுங்குதானா என்பது பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : உதவித் தலைவர் அவர்களே, எர்ஸ்கின் ஆஸ்பத்திரி மதுரை மக்களுக்கு மிகவும் அவசியமானது என்பதால், அந்த ஆஸ்பத்திரிக் குறைகளை மதுரை முனிசிபாலிடியார் அரசாங்கத்திற்குத் தெரிவித்திருப்பதை சபைக்கு வைக்க முன் வருவார்களா? மதுரை ஆஸ்பத்திரிக் குறைகளை உடனடியாகத் தீர்ப்பதன் மூலமாக, தமிழ் நாட்டில் எல்லா ஆஸ்பத்திரிகளின் குறைகளையும் தீர்க்கப்பட்டதாக இருக்கும். ஆகவே, அந்தக் குறைபாடுகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?